# 27

# அயலவருடன் நல்லுறவைப் பேணுவோம்

நாம் குடியிருக்கும் கிராமத்தில் அல்லது நகரத்தில் பல குடியிருப்புக் களைக் காண்கிறோம். அங்கு பல இன மக்கள் வாழ்கிறார்கள். எமது வீட்டிற்கு முன்னாலும், பின்னாலும், இடப்புறமாகவும், வலப்புறமாகவும் பல வீடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் சில எமக்கு நெருக்கமாகவும்,வேறு சில சற்று தூரமாகவும் அமைந்திருகின்றன. இவ்வீடுகளில் வாழும் ஒவ்வொருவரும் மற்றவருக்கு அயலவர் ஆவர். அயலவரை அண்டை வீட்டார், பக்கத்து வீட் டார் எனவும் அழைப்பர்.

திடீர் ஆபத்து அல்லது தேவை ஏற்படும்போது முதலில் உதவிக்கு வருவோர்அயல் வீட்டினரேயாவர். ஆதலால் அயல் வீடுகளில் வாழ்வோருடன் எமது உறவைச் சீராக்கிக் கொள்ள வேண்டும். சிறிய சிறிய விடயங்களைப் பெரிதுபடுத்தவோ, அதற்காகக் கோபித்துக் கொள்ளவோ கூடாது. சண்டையிடக்கூடாது. அவர்களுடன் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். சில விடயங்களை மன்னித்து மறந்து விட வேண்டும். அப்போதுதான் நல்லுறவோடு வாழும் நிலை ஏற்படும். இதுதான் முஃமின்களின் பண்பாடாகும்.

அயலவர் மூன்று வகையில் அமைவர்.

1. அயல் வீடுகளில் வாழும் உறவினர்கள்.

2. அயல் வீடுகளில் வாழும் முஸ்லிம்கள்.

3. அயல் வீடுகளில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள்.

இம்மூன்று வகை அயலவர்களுடனும் நாம் நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.




இவர்களில் எவரையும் ஒதுக்கி வைக்கக்கூடாது. அவர்களுடன் கனிவாக நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் தனது அயல் வீட்டாருடன் அழகிய முறையில் நடந்து கொள்பவரே, அல்லாஹ்விடத்தில் நல்ல அயல் வீட்டார் ஆவார்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (திர்மிதி)

ஒரு வீட்டாரைப் பற்றி அறிந்து கொள்ள அயல் வீட்டாரிடம் விசாரிப்பது வழக்கமாகும். ஏனெனில் அயல் வீட்டார்தான் பக்கத்து வீட்டார் பற்றி நன்கு அறிந்தவர்களாவர். ஒருவரைப் பற்றி அவரின் அயல் வீட்டார் சொல்லும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையை அடையும். அயல் வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளக்கூடியவர் அனேகமாக நல்லவராகவே இருப்பார்.

ஒரு முறை, 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர் முஃமின் அல்ல. அல்லாஹ் மீது சத்தியமாக அவர் முஃமின் அல்ல. அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர் முஃமின் அல்ல', என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். 'யார் அவர்?' எனக் கேட்கப்பட்ட போது, 'எவருடைய தீங்கைக் கண்டு அயல் வீட்டார் பயப்படுகிறார்களோ அவர்தான்', என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சத்தியம் செய்து கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

அண்டை வீட்டில் வாழ்வோருக்கு அநீதி இழைப்பதை இஸ்லாம் பாரிய குற்றமாகக் கருதுகிறது. அண்டை வீட்டாரின் உரிமைகள், கடமைகள் பற்றி இஸ்லாம் அதிகமாக வலியுறுத்தியுள்ளது. ஜிப்ரீல் (அலை) அவர்கள் அண்டை வீட்டார் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அடிக்கடி உபதேசம் செய்வார்கள். அண்டை வீட்டாரையும் வாரிசுரிமை உடையவர்களாக ஆக்கி விடுவார்களோ, என தாம் எண்ணும் அளவு அயல் வீட்டாரின் உரிமைகள் பற்றி வலியுறுத்திக்கொண்டே இருந்ததாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆதலால் அயல் வீட்டாருடன் நாம் கனிவாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஸலாம் கூற வேண்டும். உதவி தேவைப்பட்டால் உதவி செய்ய வேண்டும். கடன் கேட்டால் முடிந்த வரை கொடுத்துதவ வேண்டும். அவர்களுக்கு நல்லது ஏற்பட்டால் வாழ்த்துக் கூற வேண்டும். துன்பம் ஏற்பட்டால் ஆறுதல் கூற வேண்டும். நோயுற்றால் நோய் விசாரிக்க வேண்டும். மரணித்தால் ஜனாஸாவுக்குச் செல்ல வேண்டும். அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

ஒற்றுமை பலமாகும். பிரிந்திருப்பது பலவீனமாகும். ஆதலால் அயல் வீட்டாருடன் சமாதானமாக வாழ வேண்டும். அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் காரியங்களைச் செய்யக்கூடாது. அயல் வீட்டாரின் குறைகளைத் தேடித் திரியக்கூடாது. அவர்களைப் பற்றிப் புறம் பேசக்கூடாது. பொறாமைப்படக் கூடாது. குத்தலாகப் பேசக்கூடாது. கேலி செய்யக் கூடாது. இழிவு படுத்தக்கூடாது. இதனால் அயல் வீட்டு உறவு முறிந்து விடும்.

ஏழைகளுக்கும், உறவினரான அயல் வீட்டாருக்கும், உறவினர் அல்லாத அயல் வீட்டாருக்கும் நன்மை செய்யுமாறு அல்குர்ஆன் கூறுகிறது, ‘பக்கத்து வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறு நிறைய உண்பவர் உண்மை விசு வாசியல்ல’ (தபறானி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

சுற்றுச் சூழலில் அதிகமான வீடுகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் எமக்கு யாருடைய வாசற் கதவு மிக அருகில் இருக்கிறதோ, அவருக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் பின்பு அடுத்தவர், அதற்கடுத்தவர் எனத் தொடரலாம். இவ்வாறு அயலவரை மதித்து நடப்போம். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்போம். அவர்களுடன் விட்டுக்கொடுத்து வாழ்வோம். அவர்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்து அவர்களின் அன்பைப் பெறுவோம். நல்ல அயலவராக வாழ்வோம்.

**பயிற்சி**

அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிந்து வெற்றிடங்களை நிரப்புக.

(பசித்திருக்க, வாரிசுரிமையில், நோயுற்றால், உதவிக்கு, முஃமின், ஜிப்ரீல் (அலை), அயலவர், உறவு, மூன்று, அநீதி)

1. ஒரு வீட்டிற்கு நாற் புறமும் வாழ்வோர் ...................... ஆவர்.
2. அயலவர் ...................... வகைப்படுவர்.
3. அண்டை வீட்டாருக்கு ...................... செய்வது பாரிய குற்றமாகும்.
4. அண்டை வீட்டார் ...................... உரித்துடையவர் ஆக்கப்படுவாரோ எனுமளவு நபி (ஸல்) பயந்தார்கள்.
5. அயல் வீட்டார் ...................... நோய் விசாரிக்க வேண்டும்.
6. அயல் வீட்டாரை இழிவாகப் பேசினால் ............ கெட்டுவிடும்.
7. பக்கத்து வீட்டார் ........... தான் மட்டும் உண்பவன் முஃமினல்ல.
8. ஆபத்துகளின் போது முதலில் ......... வருபவர் அயலவர் ஆவர்.
9. அண்டை வீட்டார் பற்றி ...... அவர்கள் நபிகளாரிடம் அடிக்கடி உபதேசம் செய்வார்கள்.
10. அண்டை வீட்டாருக்குத் தீங்கு செய்பவன் ............. அல்லன்.

**சுருக்கமான விடை தருக.**

1. அண்டை வீட்டாருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்தினைத் தருக.
2. அண்டை வீட்டார் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள ஹதீஸ்கள் இரண்டைத் தருக.